**இ.வே.ஆரா.கு – மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம்**
**நாக்பூர்**

21 வாரம் - வாராந்திர ஆலோசனைகள்- பருத்தி பயிர் சாகுபடி (10-16 அக்டோபர் 2023 )

(37 வது நிலையான வாரம்)

"இங்குதரப்பட்டுள்ள அறிவுரைகள்- அந்தந்த மாநில அரசு வேளாண்மை பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்டவை"

| **தமிழ்நாடு** | | பெய்த மழையளவு –(மி.மீ) | | | | | கணிக்கப்பட்டுள்ள மழையளவு – (மி.மீ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அக்டோபர் | | | | | அக்டோபர் | | | | |
| | | **06** | **07** | **08** | **09** | **10** | **12** | **13** | **14** | **15** | **16** |
|  | பெரம்பலூர் | 0 | 0 | 0 | 0 | 0 | 15 | 12 | 10 | 8 | 5 |
| | சேலம் | 0 | 0 | 0 | 0 | 83 | 40 | 35 | 12 | 0 | 0 |
| | திருச்சி | | | | | | 40 | 38 | 35 | 15 | 2 |
| | விருதுநகர் | 0 | 0 | 25 | 0 | 0 | 40 | 35 | 25 | 25 | 5 |
| மழையின் அளவு மற்றும் வண்ணக் குறியீடு | | 0.1 to 2.4 மி.மீ | | 2.5 to 15.5 மி.மீ | | 15.6 to 64.4 மி.மீ | | 64.5 to 115.5 மி.மீ | | 115.6 to 204.4 மி.மீ | |
| மழைப்பொழிவு வகை | | மிக லேசான மழை | | லேசான மழை | | மிதமான மழை | | பலத்த மழை | | மிக அதிக மழைப்பொழிவு | |

**பயிர் நிலை**

கோயம்புத்தூர் மற்றும் அருகில் உள்ள பகுதிகளில் பருத்தி பயிரானது 78 நாட்கள் முதல் 88 நாட்கள் வரை வளர்ந்து காய்க்கும் பருவத்தில் உள்ளது. களைகள் வயல்களில் காணப்படுகிறது. அசுவினி, தத்துப்பூச்சி மற்றும் வெள்ளை ஈ தாக்குதல் காணப்படுகிறது. அல்டனேரியா இலைப்புள்ளி நோய் மற்றும் வேர் அழுகல் நோய் தாக்குதல் காணப்படுகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் அருகில் உள்ள பகுதிகளில், பருத்தி ஆனது 48 நாட்கள் முதல் 55 நாட்களுக்கு சப்பை கட்டும் பருவத்தில் உள்ளது. களைகளான சாரணை, வட்டக்கோரை மற்றும் அருகு முளைத்து காணப்படுகிறது. சில பகுதிகளில் களை எடுத்தல் நடைபெறுகிறது. தத்துப்பூச்சி தாக்குதல் பொருளாதார சேதார நிலையை விட குறைவாக உள்ளது. நோய் தாக்குதல் ஏதும் காணப்படவில்லை.

**ஆலோசனைகள்**

கோயம்புத்தூரில் விவசாயிகள் பாசன மற்றும் வடிகால் வசதிகளை சுத்தமாக வைத்திருக்கவும். கைகளை எடுக்கவும் (அல்லது) களை முளைத்த பின் தெளிக்கும் கலைக் கொல்லிகளான பயிரித்தையோ பேக் சோடியம் 10% இசி@62.5 கி ஏஜ/ஹெக்டர் + குயிசெல்லோ பாப் எத்தில் @50 கி ஏஜ/ஹெக்டர் என தெளிக்கவும். சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதலை தொடர்ந்து கண்காணித்து வரவும். டைனாட்டோ பிரான் 20 % எஸ் ஜி@60 கிராம் (அல்லது) பூஃ ளோனி கமிட் 50 டபிள்யூ ஜி @80 கிராம் (அல்லது) டினோ டி ஃபிரான் 20 எஸ் ஜி @ 60 கிராம் (அல்லது) தயாமீதாங்சம் 25 டபிள்யூ ஜி@40 கிராம் (அல்லது) டயாபென்தீயுரான் 50% டபிள்யு பி@200 கிராம்/ஏக்கருக்கு என தெளித்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்தவும். வயல்களில் பார்த்தீனியம் களைகளை அகற்றி டி எஸ் வி தேமல் நோய் பரவுவதை கட்டுப்படுத்தவும். வேர் அழுகல் நோய் தாக்குதலை குறைக்க கார்பன்டர் சிம் 50 டபிள்யு பி@1.2 கிராம்/லிட்டர் நீரில் கலந்து நோய் தாக்குதல் உள்ள மற்றும் அதனைச் சுற்றியுள்ள செடிகளின் வேர் பகுதியில் ஊற்றவும். அல்ட்ர்னெரியா இலை தேமல் நோயை கட்டுப்படுத்த கார்பன்டர் சிம் 50 டபிள்யு பி @0.04%(அல்லது) கார்பன்டர்சிம் 12%+ மேங்கோசப் 63% டபிள்யூ பி@0.3%(அல்லது) கிரீசோசிம் மெத்தில் 44.3 எஸ் சி@0.1 (அல்லது) ப்ரோபிநெப் 70 டபிள்யு பி@0.25% (அல்லது) ப்ரோபிகோணசோல் 25 இசி @0.1% (அல்லது) மிட்டிராம் 55%+ பைராகுலோ ஸ்ட்ரோபின் 5% டபிள்யு ஜி@0.2% (அல்லது) அசோசாசிஸ்ரோபின் 18.2 டபிள்யு/டபிள்யு+டிபிணோகோணசோல் 11.4 % டபிள்யு/டபிள்யு எஸ் சி@0.1 % (அல்லது) பூஃலுஸாபைரோசாட் 167 கி/லிட்டர்+ பைராகுளோஸ்ட்சோபின் 333 கி/லிட்டர் @0.6 % என தெளிக்கவும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் அருகில் உள்ள பகுதிகளில், விவசாயிகள் முதல் கைகளை எடுத்து களைகளை கட்டுப்படுத்தவும். மேலுரமாக தழைச்சத்து @20,40 மற்றும் 13 கிலோ கிராம்/ஹெக்டர் என முறையே ரகங்கள், வீரிய ஒட்டு ரகங்கள் மற்றும் மானாவாரி ரகங்களுக்கு பயன்படுத்தவும். அசாடிராக்டீன் 0.15 %@1 லிட்டர்/ஏக்கருக்கு தெளிக்கவும். இனக்கவர்ச்சி பொறி@2/ஏக்கருக்கு என அமைத்து அந்து பூச்சிகளை கண்காணித்து வரவும்.

***தமிழ் மொழிபெயர்ப்பு: முனைவர். அ. மணிகண்டன், முனைவர். ம. சரவணன்***